**CAB / CAA 2019** பற்றிய கேள்விகள்

**1.** குடியுரிமை திருத்தச் சட்டம் என்றால் என்ன**?**

**2014** க்கு முன்னர் இந்தியாவுக்கு வந்த ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அல்லது பாகிஸ்தானிலிருந்து இந்து, பவுத்த, சீக்கிய, சமண, பார்சி மற்றும் கிறிஸ்தவ அகதிகளுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம் இது.

**2. CAB** ஒரு சட்டமாகிவிட்டதா**?**

ஆம். இந்த மசோதா ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது, அது இப்போது ஒரு சட்டமாகும்.

**3.** இந்தச் சட்டம் அரசியல் சாசனத்தை மீறுகிறதா**?**

ஆம். இது சமத்துவம் **(**அரசியல் சாசனக் கூறு **14)**, வாழ்வுரிமை **(**அரசியல் சாசனக் கூறு **21)** , பாகுபாடு காட்டாமை **(**அரசியல் சாசனக் கூறு **15)** ஆகியவற்றையும் அரசியல் சாசனத்தின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பின்மையையும் மீறுகிறது.

**4.** குடியுரிமை திருத்தச் சட்டம் செல்லாத சட்டமா**?**

ஆம். அது இருக்கலாம். அரசியல் சாசனக்கூறு **13 (2)** இன் படி, குடியுரிமை திருத்தச் சட்டம் அடிப்படை உரிமைகளை பறிப்பதால், அது நீதிமன்றங்களால் அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று அறிவிக்கப்படலாம், அப்படி நடந்தால் அது செல்லாது போகும்.

**5.** இந்த சட்டம் ஏன் முஸ்லிம்களை விட்டுவிடுகிறது**?**

அமித் ஷாவின் கூற்றுப்படி, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாக்கிஸ்தானில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருப்பதால், அவர்களை மதத்தின் அடிப்படையில் துன்புறுத்தமுடியாது, எனவே சட்டத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளது.

**6.** முஸ்லிம்கள் மதத்தை எதிர்கொள்ளவில்லை என்பது உண்மையா**?**

இல்லை. பாகிஸ்தானில் அஹ்மதியாவும் பலூசிஸ்தானில் பலூச்சிகளும் கடுமையான மத துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர்.

**7.** இந்த சட்டம் யாரை வேண்டுமென்றே புறக்கணிக்கிறது**?**

மியான்மரைச் சேர்ந்த ரோஹிங்கியாக்கள், இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள், (முஸ்லீம் மற்றும் இந்து இருவரும்), பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதியா, சீனாவைச் சேர்ந்த உய்குர்கள் உள்ளிட்டோர்கள்.

**8.** இந்தியாவில் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கு இந்தச் சட்டத்தின் பாதிப்புகள் என்ன?

இந்தச் சட்டம் குறிப்பாக புலம் பெயர்ந்தோருடன் மட்டுமே தொடர்புடையது. ஆனால், குறிப்பாக பாகுபாடு காட்டுகிற அரசியலின் காரணமாக, இங்கு தலைமுறைகளாக வாழ்ந்து வருகிற இந்திய முஸ்லிம்களால் அவர்களின் சமூக பொருளாதார காரணங்களால் தங்கள் வரலாற்றுரீதியான இருப்பை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தமுடியவில்லை என்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். தேசிய மக்கள் பதிவேடு மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவை வெளிப்படைத்தன்மை இல்லாத நிலையில் அவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

**9.** இந்தியாவுக்கு குடிபெயர்ந்த முஸ்லிம்களுக்கு இந்தச் சட்டத்தால் ஏற்படும் பாதிப்புகள் என்ன?

இயல்பான உரிமை என்ற வகையில் இந்திய குடியுரிமையை நாடுகின்ற அனைத்து முஸ்லிம்களும், அவர்களைப் போலவே நாடுகின்ற இந்துக்களுக்குத் தரப்படுவதுபோன்ற குடியுரிமையைப் பெற மாட்டார்கள். இது தனிப்பட்ட விருப்ப அதிகாரமாக மட்டுமே இருக்கும்

**10.** கெடு விதிக்கப்பட்ட தேதியாக டிசம்பர் **31** ஏன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

இந்த தேதிக்கு அரசாங்கம் எந்த காரணத்தையும் தெரிவிக்கவில்லை, எந்த காரணத்தை முன்வைத்தும் எங்குமே அதனை நியாயப்படுத்தவுமில்லை.

**11** சட்டம் "துன்புறுத்தப்பட்ட மதத்தினருக்கு" அடைக்கலம் தருமா?

" துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினர்” என்ற வார்த்தையை சட்டம் குறிப்பிடவில்லை, அதாவது சட்டவிரோதமாக குடியேறிய அனைவருக்கும் அவர்கள் மதரீதியாக 'துன்புறுத்தப்பட்டார்கள்' என்று நிரூபிக்கவில்லை என்றாலும் குடியுரிமை வழங்கப்படும்.

**12.** இந்தச் சட்டத்தின்படி குடியுரிமை கோர முடியாதவர்களுக்கு என்ன நடக்கும்?

இது குறித்து சட்டம் எதுவும் கூறவில்லை. ஆனால் அசாமின் உதாரணம் இருக்கிறது. அவர்களை தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்க முடியும், அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்கத்தில் தொடங்கியுள்ளன.

**13.** இந்தச் சட்டத் திருத்தம் என்பது திடீர் நடவடிக்கையா?

**2015** ஆம் ஆண்டு முதலாக இது தொடர்பாக பணிகள் நடந்துள்ளன. வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் பாஸ்போர்ட் விதிகள் மற்றும் விதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.. பாஜகவின் **2014** மற்றும் **2019** ஆம் ஆண்டுகளின் தேர்தல் அறிக்கைகளில் இத்தகைய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**14. CAA** சட்டத்திலிருந்து யார் யாருக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது?

அசாம், மேகாலயா, மிசோரம் அல்லது திரிபுராவின் பழங்குடிப் பகுதிகளுக்கும், அருணாச்சல பிரதேசம், மிசோரம் மற்றும் நாகாலாந்து போன்ற மாநிலங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தாது.

**15.** திருப்பி அனுப்பும் ஒப்பந்தம் என்றால் என்ன?

திருப்பி அனுப்புவது என்பது ஒருவரை திருப்பி அனுப்புவது அல்லது ஒருவரை அவர்கள் பிறந்த இடத்திற்கு திருப்பி அனுப்புவது

**16** பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுடன் திருப்பி அனுப்பும் ஒப்பந்தத்தை இந்தியா உருவாக்கியுள்ளதா?

இல்லை. இந்தியாவுக்கு அத்தகைய அதிகாரபூர்வ ஒப்பந்தம் எதுவும் இல்லை, எனவே முஸ்லிம் "சட்ட விரோதமாக குடியேறியவர்களை" திருப்பி அனுப்ப முடியாது.

**17.** தற்போதைய குடியுரிமைச் சட்டம், **1955** இன் படி சட்டவிரோதமாக குடியேறியவர்கள் யார்?

செல்லுபடியாகும் பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைந்த வெளிநாட்டவரை 'சட்டவிரோத குடியேறிகள்' என்று இந்த சட்டம் வரையறுக்கிறது.

**18.** சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குறித்து குடியுரிமை திருத்தச் சட்டம் என்ன கூறுகிறது?

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அல்லது பாகிஸ்தானில் இருந்து வரும் **6** சமூகங்களைச் சேர்ந்த அனைத்து சட்டவிரோத குடியேறிகளும் சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதப்பட மாட்டார்கள் என்று இந்த சட்டம் சொல்கிறது.

**19.** முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் மட்டுமே சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று அழைக்கப்படுவார்கள் என்று அர்த்தமா?

ஆம். சட்டத்தின் பாதிப்பு அப்படித்தான் உணர்த்துகிறது.

**20.** குடியுரிமை **CAA** இன் படி எவ்வாறு வழங்கப்படும்?

துன்புறுத்தப்பட்ட ஆறு சமூகங்களுக்கு, **11** ஆண்டுகளுக்கு பதிலாக குடியிருப்பு விதி **5** ஆண்டுகளாக குறைக்கப்படுகிறது, இது மற்ற வகையான விண்ணப்பதாரர்களுக்கு **11** ஆண்டுகள்தான்.